# பெரியார்நாடு உருவாகும்!

தொகுப்பு:

**அதி அசுரன்**

வெளியீடு:

**பெரியார் திராவிடர் கழகம்**

95, டாக்டர் நடேசன் சாலை,

அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600004.

தொலைபேசி: 044-24980745

periyardk@gmail.com

**நூல் கிடைக்குமிடங்கள்**

பெரியார் படிப்பகம்
பேருந்து நிலையம் அருகில்
மேட்டூர் அணை - 636 401
9786316155

பெரியார் படிப்பகம்
அரசு விரைவுப் பேருந்து நிலையம்
காந்திபுரம் - கோவை
9843323153

பெரியார் படிப்பகம்
தோழர் பத்ரி நாராயணன் நினைவு நூலகம்
73 / 1 இலாயிட்ஸ் சாலை
சென்னை - 14
044.30228213

இராவணன் படிப்பகம்
இராதாகிருட்டிணன் நகர்
அரியாங்குப்பம்
புதுச்சேரி - 7
9443045614

பெரியார் புத்தக நிலையம்
மெக்டனால்டு சாலை, கண்டோன்மெண்ட்,
ஸ்டேட்பேங்க் மண்டல அலுவலகம் எதிரில்
திருச்சி - 620001
9865596940

**நன்கொடை: ரூ.10.00**

விமர்சனங்களை அனுப்ப - periyardk@gmail.com

மின் நூலாகத் தரவிறக்கம் செய்ய
www.periyardk.org

பதிப்பு ஆண்டு : 2011 டிசம்பர் 15

# பெரியாறு அணை உடைந்தால் பெரியார்நாடு உருவாகும்!

முல்லை பெரியாறு அணை பலவீனமாக உள்ளது; எனவே அதை உடைப்போம் என சர்வதேசியத்திலகங்களான மலையாள கம்யூனிட்டுகளும், இந்திய தேசியத் திலகங்களான காங்கிரசு, பாரதீய ஜனதாவும் உச்சக்கட்ட அடாவடியைத் தொடங்கியுள்ளன.

சாகித்திய அகாடமி விருது பெற்ற மலையாள எழுத்தாளரான பால் ஜகாரியா ஆனந்தவிகடன் ஏட்டில் (19.01.2003) **“தமிழக கிராமங்களில்தான் இன்னும் ஈரமுள்ள மனிதர்கள் வாழ் கிறார்கள்... மலையாளி களுக்கு அரிசிமுதல் அத்தனையும் தமிழகத்தில் இருந்துதான் வருகின்றது. ஆனால் அதே விவசாயிகளின் விவசாயத்திற்கு பெரியாறு அணை யிலிருந்து தண்ணீர்விட மறுக்கிறது கேரளம்...காவிரி, பெரியாறு அணை, பவானி என சுற்றிச்சுற்றி தண்ணீர் தராமல் தமிழர்களை மூச்சுத்திணறச் செய்யும் இவ்வளவு சதிச் செயல்கள் நடக்கும் போதும் நெய்வேலியில் மின்சாரத்தை உற்பத்தி செய்து வேறொரு மாநிலத்திற்கு அதைக் கொடுப்பதுதான் தமிழனின் குணம்”**

என கேரள அரசின் துரோகத்தை விளக்கியது போல, தன் நாட்டுக்கு 70 சதவீத அத்தியாவசிய உணவுப் பொருட்களை விளைவித்து அனுப்பும் தமிழனுக்கு நீர்தர மறுக்கின்றனர் மலையாளிகள். முன் எப்போதும் நடந்திராத சம்பவமாக, தமிழ்நாட்டுக் காய்கறி லாரிகளையும் மலையாளிகள் தாக்கி திருப்பி அனுப்பியுள்ளனர். விவசாயம் செய்ய தண்ணி தராத கேரளாக்காரனுக்கு அவனிடமே அடி, உதையை வாங்கிக் கொண்டு அவனுக்கே நம் நாட்டில் இருந்து உணவுப் பொருட்களை அனுப்பி அதன்மூலம் வயிறு வளர்க்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள் தமிழர்கள்.

எதிர்வினையாக தமிழ்நாட்டில் பல்வேறு இயக்கங்கள், அரசியல் கட்சிகள், அமைப்புகள் என அனைவரும் கேரள எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆனால்

அனைத்துத் தரப்பிலும் நடக்கும் போராட்டங்கள் முதன்மை எதிரியை அடையாளம் காட்டாமலேயே நடந்து வருகின்றன. முல்லை பெரியாறு அணைச் சிக்கலுக்கு காரணம் மலையாளிகள் மட்டுமா?

## முல்லை – பெரியாறு – அணை

தமிழ்நாட்டில் உள்ள இராஜபாளையம் அருகில் உள்ள சிவகிரி மலைப் பகுதியில் தான் பெரியாறு நதி உற்பத்தி ஆகிறது. இங்கிருந்து 56 கி.மீ பயணம் செய்து கேரள எல்லையை அடைகிறது. பெரியாற்றோடு கேரளாவில் பாயும் முல்லையாறும் இணையும் இடத்தில் முல்லைப்பெரியாறு அணை கட்டப் பட்டுள்ளது. 1886 ஆம் ஆண்டு அக்டோபர் 29 ஆம் நாள் திருவாங்கூர் சம தானத்துக்கும் சென்னை இராஜதானிக்கும் இடையே ஏற்பட்ட 999 ஆண்டுகளுக்கான ஒப்பந்தத்தின் அடிப்படையில், கர்னல் ஜான் பென்னி குக் அவர்களின் கடுமை யான முயற்சியில், இங்கிலாந்தில் உள்ள தனது சொந்த சொத்துக் களை விற்று கிடைத்த பணத்தை வைத்து இந்த அணை கட்டி முடிக்கப்பட்டது. 1970 வரை இந்த ஒப்பந்தம் எந்த இடையூறும் இல்லாமல் நடைமுறையில் இருந்துள்ளது.

1979 இல் முல்லைப் பெரியாறு அணையிலிருந்து 48 கி.மீ தொலைவில் உள்ள இடுக்கி அணையில், கேரளாவின் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. முல்லைப்பெரியாறு அணையின் மட்டத்தை 136 அடிக்கு மேல் மிகாமல் - தேங்காமல் செய்தால் மீதமுள்ள நீர் இடுக்கி அணைக்கு வந்து சேரும். அதன்மூலம் இடுக்கி அணையில் 780 மெகா வாட் மின்சக்தி தடையில்லாமல் உற்பத்தி செய்யலாம் என இடுக்கி அணையின் செயற்பொறியாளர் எம்.கே பரமே வரன் நாயர் அரசுக்கு திட்ட அறிக்கை கொடுத்தார். அத்திட்டத்தை செயற்படுத்த கேரள அரசு தற்செயலாக அப்போது குஜராத் மாநிலத்தில் உள்ள மோர்வி என்ற அணை உடைந்த செய்தியை பயன்படுத்திக் கொண்டது. அதன் அடிப்படையில் அணை பலவீனமாக உள்ளதாக மலையாள மனோரமா ஏடு கிளப்பிய வதந்தி இன்றுவரை அணையாமல், இரு தேசிய இனங்களுக்கு இடையிலான போராக உருவாகியுள்ளது.



## தேவிகுளம் – பீர்மேடு

முல்லைப்பெரியாறு அணைச் சிக்கல் தோன்றும் போதெல்லாம் தவறாமல் பேசப்படும் ஒரு செய்தி. மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கப்பட்டபோது தேவிகுளம், பீர்மேடு ஆகிய தமிழர்கள் வாழும் பகுதி தமிழ்நாட்டோடு இணைக்கப்படாமல் கேரளாவோடு இணைக்கப்பட்டுவிட்டது. அந்தப் பகுதியில்தான் அணை உள்ளது. இது மட்டுமே சிக்கலின் மையம் என்று தமிழ்தேசிய இயக்கங்களால் குற்றம்சாட்டப்படுகிறது. இது சரியான பார்வை அல்ல. முதன்மையான - உண்மையான எதிரியை அடையாளம் காண இயலாத - அடையளாம் காட்ட விரும்பாத தன்மை என்றே சொல்லவேண்டியுள்ளது.

முல்லைப்பெரியாறு அணை இருக்கும் தேவிகும், பீர்மேடு பகுதிகள் 1886 ஆம் ஆண்டு காலங்களில் திருவாங்கூர் சம தானத்தோடு இணைந்திருக்கவில்லை. அவை சென்னை இராஜதானியோடுதான் இருந்தன. ஒப்பந்தம் போட்ட ஆங்கிலேயர்கள் எல்லைகளைச் சரியாகக் கவனிக்காமல் தேவை யின்றி திருவாங்கூர் சம தானத்தோடு ஒப்பந்தம் போட் டுள்ளனர். இதுதான் சிக்கலின் தொடக்கம். தற்போது நடப்பது போல சிக்கல் பின்னாளில் வரும் என உணர்ந்த திருவாங்கூர் சம தானம் அன்றைய சென்னை இராஜதானி கவர்னருக்கு ஒரு வேண்டுகோள் வைத்தது. அணையின் நீர்பிடிப்பு பகுதி மற்றும் அணைப்பகுதி முழுவதையும் சென்னைக்கு முழு உரிமையாகக் கொடுத்து விடுகிறோம். அதற்கு விலையாக 6 இலட்ச ரூபாய் தரவேண்டும் என்பதே அந்த கோரிக்கை. அந்தக் கோரிக்கையை பலமுறை கடிதம் வாயிலாகத் தெரிவித்தும் ஆங்கிலஅரசு அதைக் கண்டுகொள்ள வில்லை. **தமிழ்ப்பேரரசுகள் காலம் முதல் ஆங்கிலேயர் காலம் வரை உருவான அரசாங்கங்கள் அனைத்திலும் நிர்வாகத் துறையில் பார்ப்பன அதிகாரிகளே ஆதிக்கம் செலுத்தினர் என்பதையும் நாம் முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.**

திருவாங்கூர் சம தானத்துடன் போடப்பட்ட ஒப்பந்தத்தின் முக்கிய அம்சம் என்னவென்றால், பெரியாறு அணையின் நீர்பிடிப்பு பகுதியான 777 சதுர கிலோமீட்டர் பரப்பளவு முழுவதிலும் கிடைக்கும் நீர் முழுவதும் தமிழ்நாட்டுக்குச் சொந்தமானது. உரிமையானது. அந்த நீரைத் தேக்கி வைப்பதற்காகத் தான் பெரியாறு அணை. ஒப்பந்தம் அணைக்கு அல்ல. தண்ணீருக்குத்தான்.

தமிழ்நாடும் கேரளாவும் தனித்தனி நாடுகளாக இருந்திருந்தால் சர்வதேசநதிநீர்ச்சட்டங்களின்படி தமிழ்நாட்டின் உரிமை முழுதும் மீட்கப்பட்டிருக்கும். தேவிகுளமும் பீர்மேடும் எந்த நாட்டில் இணைக்கப் பட்டிருந்தாலும் முல்லைப்பெரியாறு அணையிலும், பெரியாற்று நீரிலும் நமக்கிருக்கும் உரிமை பறிபோயிருக்காது. எனவே சர்வதேச நதிநீர்ச்சட்டத்தைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

## சர்வதேச நதிநீர் சட்டங்கள்

இன்று சாதாரணமாக கிராமங்களில்கூட சிறுசிறு ஏரிகளில், குளங்களில் பாசனவசதி பெற்று விவசாயம் செய்பவர் களிடையேகூட கடைமடைக்காரனுக்குத்தான் முன்னுரிமை என்ற வழக்கம் உள்ளது. அதையேதான் சர்வதேச நதிநீர் சட்டமும் சொல்கிறது. ஒரு நதியின் கடைமடை டெல்டா பகுதி விவசாயி களுக்கு அல்லது பயனாளர்களுக்குத்தான் அந்த நதியில் முன்னுரிமை. அவர்கள் அனுமதியின்றி நதியின் மேல்பகுதியில் இருப்பவர்கள் எந்த திட்டத்தையும் செயல்படுத்தக்கூடாது. “ நதியின் கீழ் நிலையில் உள்ளவர்கள் அனுமதி இல்லாமல் மேல்மட்டத்தில் உள்ளவர்கள் அணைகள் ஏதும் கட்டக் கூடாது. நதியில் கீழ்நிலையில் பாதிக்கின்ற வகையில் நீரை செயற்கையாக தடுத்து உபயோகிக்கக் கூடாது” என்கிறது சர்வதேச நதிநீர்ச் சட்டம். இதன் அடிப்படையில் தான் பலநாடுகளில் நதிநீர்ப் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

உலகில் பல்வேறு நாடுகளுக்கிடையே ஓடும் பல நதிகள் உள்ளன. ஐரோப்பாவில் ரைன் நதியை பயன்படுத்துவது தொடர்பாக ஜெர்மன், ஃப்ரான் , லக்ஸம்பர்க், நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்கிடையே சிக்கல்கள் எழுந்தன. ஆப்ரிக்காவில் நைல் நதி பங்கீடு தொடர்பாக சூடானுக்கும் எகிப்துக்கும் சிக்கல். டான்யூப் நதிப் பங்கீட்டில் ஆ த்திரியா, துருக்கிக்கு இடையே சிக்கல். வட அமெரிக்க மாகாணங் களுக்குகிடையே கொலராடோ நதி நீர்ச்சிக்கல். தென் அமெரிக்காவில் அமேசான் நதிநீர்ச்சிக்கல். ஆமுர் நதி பங்கீட்டில் சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் சிக்கல் என உலகெங்கிலும் நதிநீர்ப் பங்கீட்டுச் சிக்கல்கள் இருந்தன.



அந்த வரிசையில் இந்தியாவுக்கும் பாகி தானுக்கும் இடையே ஏற்பட்ட சிந்து நதிநீர் ஒப்பந்தம் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒப்பந்தமாகும். 19.09.1960 இல் அன்றைய இந்திய பிரதமர் நேருவும் பாகி தான் அதிபர் முகமது அயூப் கானும் கையெழுத்திட்ட அந்த ஒப்பந்தம் சட்லஜ், ராவி, பியா ஆகிய கிழக்குப் பகுதி நதிகளையும் ஜீலம், சிந்து, செனாப் ஆகிய மேற்குப் பகுதி நதிகளையும் சமமாகப் பங்கிட்டுக் கொள்வதற்காகவும் அவற்றில் நீர்மின்சக்தித் திட்டங்களை செயல்படுத்துவதற்காகவும் இயற்றப்பட்டதாகும்.

இரு நாடுகளுக்கு இடையே உள்ள சிக்கல் ஆதலால் அப்போதே ஐக்கிய நாடுகள் அவையும் தலையிட்டு ஐ.நா அவை உருவாக்கிய நடுவர்முன்னிலையில் உலகவங்கியின் மேற் பார்வையில் உலக வங்கியும் ஒரு சாட்சியாக இந்த ஒப்பந்தம் இயற்றப்பட்டது. இந்தியாவுக்கும் பாகி தானுக்கும் இடையே பலமுறை போர்கள் நடைபெற்ற காலத்திலும் இந்த ஒப்பந்தங்கள் மீறப்படவில்லை. இந்த ஆறு நதிகளின் பங்கீட்டில் எந்த சிக்கலும் வரவில்லை. அப்படியே உருவாகி இருந்தாலும் அவற்றைத் தீர்க்கும் அனைத்து வழிமுறைகளையும் ஐ.நா மன்றமும், உலக வங்கியும் செய்திருக்கின்றன.

ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் அல்லது நாடுகளுக்கும் இடையே ஒரு நதியைப் பகிர்ந்து கொள்வதில் உருவாகும் கருத்து வேறுபாடுகளையும் சிக்கல்களையும் தீர்த்துவைப்பதற்கு சர்வதேச நதிநீர்ச் சட்டங்கள் பயன்படுகின்றன. அதில் முக்கியமான விதிகள் 1956 ஆம் ஆண்டு பின்லாந்து தலைநகர் ஹெல்சிங்கி நகரில் நடைபெற்ற நதிநீர்ப் பங்கீடு குறித்த சர்வதேச அளவிலான மாநாட்டில் முடிவெடுக்கப் பட்டவை ஆகும். இவை போன்ற சர்வதேச நதிநீர்ச்சட்டங்களை நடைமுறைப்படுத்தவும் கண்காணிக்கவும் ஐ.நா மன்றம் பல நடுவண் அமைப்புகளை உருவாக்கியுள்ளது. அவற்றில் **ICJ ( International Court of Justice ) PCA (Permenent Court of Arbitration)** ஆகியவை முக்கியமானவையாகும்.

**கேரளா ஒரு தனி நாடாகவோ அல்லது இந்தியாவுடன் இணைந்த பகுதியாகவோ இருந்து, தமிழ்நாடு ஒரு தனி குடிஅரசாக, தனி நாடாக இருந்தால் முல்லைப்பெரியாறு,**

**காவிரி, பாலாறு போன்ற அனைத்து ஆற்றுநீர் உரிமைகளும் சர்வதேச நதிநீர்ச்சட்டங்களின்படி முழுமையாக நமக்குக் கிடைத்துவிடும். தமிழ்நாடு தனி நாடாக இருந்தால் முல்லைப் பெரியாற்றிலோ, காவிரியிலோ அண்டை நாடு தடை செய்தால், சிக்கல் உருவாக்கினால் ஐக்கிய நாடுகள் மன்றமும், சர்வதேச நடுவர் மன்றங்களும் தலையிட்டு சிக்கலைத் தீர்த்துவைக்கும். அதற்கு எடுத்துக்காட்டுதான் சிந்துநதிநீர் ஒப்பந்தம். ஆனால் ஒன்றுபட்ட இந்தியாவில் - பார்ப்பன - பனியா கும்பல்களின் ஆதிக்கத்தில் சிக்குண்டு கிடக்கும் நாட்டில் பார்ப்பன நலன்களே முன்னிறுத்தப்படும்.**

*தேவிகுளம், பீர்மேடு மீட்பு, அணை உரிமை மீட்பு, காவிரி, பாலாறு உரிமை மீட்பு அனைத்தும் செயலாவதற்கு பெரியார் வழியில் தனித்தமிழ்நாடு நோக்கி போராடுவதே சரியான திசை வழியாகும். இந்திய விடுதலை இல்லை என்றால் மொழிவாரி மாகாணப் பிரிவினையே நடந்திருக்காது. எனவேதான் பெரியார் மொழிவாரி மாகாணப் பிரிவினை நடப்பதற்கு முன்பு 1930 லிருந்தே தனித்தமிழ்நாட்டுக்காகப் போராடினார். அதற்குப்பிறகும் 1973 இல் தான் சாகும்வரையும் "தமிழ்நாடு தமிழருக்கே" என முழங்கினார்.இந்த மொழி வாரிப் பிரிவினையையும்கூட பெரியார் கடுமையாக விமர்சித்துள்ளார்.*

*"பிரிவினைக்குப் பெயர் மொழிவாரி நாட்டுப்பிரிவினை. இதில் பிரிந்துபோகவேண்டுமென்று வாதாடுகிறவர்கள் மொழியை ஆதாரமாகக்கொண்டுதானே பிரிவினை கேட்க வேண்டும்? அதை விட்டுவிட்டு, வேறு மொழி 100 க்கு 69, 70, 80 வீதம் பேசுகிற மக்கள் உள்ள நிலையைத் தங்கள் நாட்டுடன் சேர்க்கவேண்டுமென்று கேட்பது எப்படி யோக்கியமாகும்? அல்லது இந்தப் பிரிவினைக்கு, மொழிவாரி மாகாணப்பிரிவினை என்றாவது எப்படிச் சொல்ல முடியும்?" என்றார்.*

*- விடுதலை - 07.11.1953*

## பார்ப்பன இந்தியா

*இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்பு மாண்டேகு செம் போர்டு சீர்திருத்தங்கள் நடைமுறைப் படுத்தப்பட்ட 1919 க்கு முன்பு நதிநீர் பங்கீடு, நீர்ப்பாசனம் தொடர்பான விவகாரங்கள்*



*இங்கிலாந்து அரசவையின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்தன. 1919க்குப் பிறகு இந்தியர்களுக்கு அதிகாரம் கிடைக்கத் தொடங்கிய போதே பார்ப்பனர்கள் கையில் அதிகாரம் சென்றதால் அனைத்துத் துறைகளையும் போலவே நதிநீரிலும் பார்ப்பன நலன்கள் முன்னிறுத்தப்பட்டன. ஆங்கிலேயர்கள் நம்மைவிட்டு போகும் வரை காவிரி, முல்லைப்பெரியாறு ஆறுகளில் சம்மந்தப் பட்ட மாகாணங்களுக்கிடையே மோதல்போக்கு இல்லாமல் ஒப்பந்தங்கள் போடப்பட்டு முறையாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன. தோழர் பெரியார் சொன்னது போல, ஆங்கிலேயர்களிடமிருந்து பார்ப்பன - பனியாக்களுக்கு நடந்த மேட் ஓவர்தானே இந்திய விடுதலை. அப்படிப்பட்ட பார்ப்பன - பனியா இந்தியாவில்தான் தமிழர்களின் அனைத்து உரிமைகளையும் போலவே ஆற்றுநீர் உரிமைகளும் பறிபோய்விட்டன.*

*அதனால்தான் பெரியார்,* **"தமிழன் தன்னை இந்தியன் என்று கருதியதால் தமிழர் நாட்டையும், தமிழ் வீரத்தையும், கலையையும், நாகரீகத்தையும் மறந்தான். தமிழன் தன்னை இந்து என்று கருதியதால் தன்னுடைய மானத்தையும், ஞானத்தையும், பகுத்தறிவையும், உரிமையையும் இழந்தான்"** *என்றார்.*

*உச்சநீதிமன்றம் 2006 பிப்ரவரி 27 அன்று வழங்கிய தீர்ப்பில், முல்லைப் பெரியாறு அணை மிகவும் வலுவாக உள்ளது என்றும், முதல் கட்டமாக 142 அடிவரை தண்ணீர் தேக்கலாம் என்றும் கூறியது. முல்லைப் பெரியாறு அணையின் இணைப்பாக உள்ள சிற்றணையில் சிறு சிறு செப்பனிடும் பணிகளைச் செய்துமுடித்த பின் முழுக் கொள்ளளவான 152 அடிவரை தண்ணீர் தேக்கலாம் என்றும் தீர்ப்பளித்தது. கேரள அரசின் மறுஆய்வுமனுவுக்குப் பிறகு 2007 ஆக டில் மீண்டும் தீர்ப்பை உறுதிசெய்தது. ஆனால் அனைத்து தீர்ப்புகளையும், வழிகாட்டு நெறிமுறைகளையும் கேரள அரசு குப்பையில் தூக்கிப்போட்டு விட்டது. இந்திய அரசின் வனப்பாதுகாப்புச் சட்டங்களையும் மீறி முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்டுவதற்காக முதற்கட்டச் சோதனைகளையும் நடத்தி முடித்திருக்கிறது.*

*இந்திய அரசின் சட்டங்களையோ, உச்சநீதிமன்ற தீர்ப்புகளையோ மதிக்காத, செயல்படுத்தாத கேரள அரசினைக் கண்டித்து தமிழ்நாட்டு உரிமையைப் பெற்றுத்தர வேண்டிய*

மத்திய பார்ப்பன அரசு, எங்கோ, எந்த நாட்டிலோ பிரச்சனை என்பது போல கண்டுகொள்ளாமல் இருப்பதும் பிரச்சனை எல்லைமீறிப் போகுனபிறகு கமிஷனைப் போடு அல்லது கல்லைப் போடு என்பது போல ஒரு விசாரணைக் கமிஷன் அமைப்பது, பேச்சுவார்த்தை நடத்துவது என்று சிக்கலைத் தீர்க்கும் எண்ணமில்லாமல் செயல்படுகிறது.

டேம் 999 என்ற ஒரு பொய்ப்பிரச்சாரப் படத்துக்கு மத்திய அரசு சென்சார் சான்றிதழ் அளிக்கிறது. அது கருத்துரிமை என்றால், அரசியல் சாராத கலை தொடர்பான விஷயம் என்றால் நாங்களும் படம் எடுக்கிறோம். இந்திரா காந்தி கொலை பற்றி பஞ்சாப்காரனின் பார்வையில் - இராஜீவ் கொலை பற்றி ஈழத்தமிழ்பெண்களின் பார்வையில் நாங்களும் படம் எடுக்கிறோம் அனுமதிக்குமா மத்திய அரசு? அவ்வளவு வேண்டாம் சங்கரராமன் கொலை பற்றி தற்போதைய முதல்வர் ஜெயலலிதாவின் பார்வையில் படம் எடுக்கிறோம் சென்சார் போர்டு அனுமதிக்குமா? இரு தேசிய இன மக்களுக்குள் மோதலை உருவாக்கக்கூடிய திரைப்படம் என நன்கு தெரிந்தும் படத்தை அனுமதிக்கிறார்கள்.

இதுபோல இரு தேசிய இனங்களுக்குள் மோதலை உருவாக்கிவிட்டு, அதில் குளிர் காய்ந்துகொண்டு தனது சுரண்டலை - இந்திய தேசியச்சுரண்டலை தங்கு தடையின்றி நடத்துகிறது பார்ப்பன - பனியா அரசு. மத்திய அரசில் முக்கிய முடிவுகள் எடுக்கும் அதிகாரங்களைக் கொண்ட - நீர்வளத்துறை உள்ளிட்ட முக்கியமான 30 துறைகளில் ஆதிக்கம் செலுத்தும் பார்ப்பன உயர்சாதியினர் எண்ணிக்கை குறித்து மண்டல்குழு அறிக்கை வெளியிட்ட பட்டியல் இதோ. **1980** ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளிவிபரம் இது.

| பிரிவு | மொத்தம் | SC% | BC% | பார்ப்பன உயர்ஜாதி% |
|---|---|---|---|---|
| **Class I** | 1,74,043 | 5.68 | 4.69 | 89.63 |
| **Class II** | 9,12,786 | 18.18 | 10.63 | 71.19 |

அதன்பிறகு 2009 ஆம் ஆண்டு மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிபரத்தையும் பார்ப்போம்.



| பிரிவு | SC% | ST% | BC% | பார்ப்பன உயர்ஜாதி% |
|---|---|---|---|---|
| I | 12.54 | 4.85 | 5.44 | 77.17 |
| II | 14.9 | 5.7 | 3.6 | 75.8 |

இந்தியா முழுவதும் வேதாந்தா, ஜிண்டால், போ கோ, டாடா, மிட்டல், ரிலையன் போன்ற பார்ப்பன - பனியா மற்றும் பார்ப்பன அதிகாரிகளாலேயே நிர்வகிக்கப்படும் பன்னாட்டுக் குழுமங்களால்தான் கனிமவளக்கொள்ளை, கல்விக்கொள்ளை, கடல்வளக் கொள்ளை, பெட்ரோலியக்கொள்ளை, அலைக் கற்றைக்கொள்ளை என அனைத்து வகையான சுரண்டல்களும் நடத்தப்படுகின்றன. மேற்கண்ட பட்டியலில் உள்ள பார்ப்பன அதிகார வர்க்கத்தின் துணையோடுதான் சுரண்டல்கள் திட்ட மிட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்நியநேரடி முதலீடு, சில்லறை வர்த்தகத்திலும் நேரடி அந்நிய முதலீடு, கூடங்குளம் அணுஉலை அமைப்பு என மக்கள்விரோத முடிவுகளையும் இந்த அதிகார வர்க்கம்தான் செயல்படுத்துகிறது.

இந்த பனியா - பன்னாட்டு வணிகக்கும்பல்களின் நலன் களுக்காக மேற்கண்ட பார்ப்பன அதிகார வர்க்கம் போடும் திட்டங்கள்தான் நமக்கு பட்ஜெட்டாகவும், ஐந்தாண்டு திட்டங்களாகவும், தொழில் அபிவிருத்தி திட்டங்களாகவும் அரசியல்வாதிகளால் சொல்லப்படுகிறது. அவர்களுக்கு கொள்ளை இலாபம் தரும் திட்டங்களைச் செயல்படுத்துவதற் காக இந்த பனியா - பன்னாட்டுக்கும்பல் இந்திய அரசியல்வாதி களுக்கு பிச்சை போடும் காசைப் பங்கு போடுவதில் வரும் சண்டையும், இந்தக் கூட்டுக்கொள்ளையை மக்கள் கவனிக்காமல் இருக்க மத்திய அரசால் நடத்தப்படும் நாடகங்களும்தான் தான் நமக்கான அரசியல்.

## முதன்மை எதிரி

தொடர்ந்து பல வருடங்களாக சிக்கல்களை வளரவிட்டு தேசிய இனங்களுக்குள் மோதலை உருவாக்கி விட்டு, தனது சுரண்டல்களை அயராது நடத்திக்கொண்டிருக்கும் இந்திய தேசியமும் அதனால் பயன்பெறும் பார்ப்பன - பனியாக் கும்பல்களுமே நமது முதன்மை எதிரி. அடாவடியாக நடந்து

கொள்ளும் மலையாளிகளுக்கு எதிராக அவர்களது வணிக நிறுவனங்களைத் தாக்குகிறோம். கேரள எண் உள்ள வாகனங் களைத் தாக்குகிறோம். கேரளாவுக்கு எதிராக பொருளாதார முற்றுகைப் போராட்டம் அறிவிக்கிறோம். எல்லாம்சரிதான். எத்தனை நாளுக்குத்தான் அம்பை மட்டும் எதிர்த்துக் கொண்டிருப்போம். எப்போதுதான் எய்தவனை நோக்கித் திரும்புவோம். சர்வதேசச் சட்டங்கள் நமக்கு ஆதரவாக உள்ளன. ஆனால் நாம் தனி நாடாக இருந்தால்தான் அவை பயனளிக்கும். இந்த உண்மை களை எப்போது உரிமை மறுக்கப்பட்டவர்களிடம் சொல்லப்போகிறோம்?

இளைஞர்கள் ஆலுக்கா நகைக்கடை தாக்குதல், காய்கறி லாரிகளை மறித்தல், கேரளா செல்லும் பேருந்துகளை மறித்தல், நாயர் டீக்கடை, பேக்கரிகளை உடைத்தல் என ஒவ்வொரு வருடமும் நடத்திக்கொண்டிருக்கத்தான்போகிறோம். நமது தலைவர்களும் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், உச்சநீதிமன்ற வழக்கு, பிறகு நடுவர் மன்றம், அந்த தீர்ப்புகளை அமுல்படுத்த சாகும்வரை உண்ணாவிரதம் என தொடர்ந்து இயங்கத்தான் போகிறார்கள். நவம்பர் மாதமானால் முல்லைப்பெரியாறு, ஜூன், ஜூலையானால் காவிரி உரிமைப் போராட்டம் என சீசன் போராட்டங்களையும் பயனற்ற சடங்குத்தனமான போராட்டங் களையும் காணச் சகிக்காமல் மனம் புழுங்கி, வெந்து முத்துக் குமார்களும் செங்கொடிகளும் தீயில் வெந்து மடிந்துகொண்டே தான் இருப்பார்கள். ஒருமுடிவு வேண்டாமா?

**தமிழ்நாட்டு விடுதலையில் அக்கறையுள்ள தோழர்கள், தலைவர்கள் ஒன்றிணைந்து இந்திய தேசியத்துக்கு நெருக்கடி கொடுக்கும் வகையிலான போராட்டங்களை முன்னெடுங்கள். பெரியாரைப் போல, பெரியார் காலத்தைப் போல இந்திய தேசியக் கொடி எரிப்பு, இந்திய யூனியன் வரைபட எரிப்பு, இந்திய அரசியல் சட்ட எரிப்பு போன்ற போராட்டங்களை அறிவியுங்கள். தனித்தமிழ்நாட்டுக்கான பரப்பரைகளை முல்லைப் பெரியாறு அணையிலிருந்தே தொடங்குங்கள். உச்சநீதிமன்றம் நம்மைக் காப்பாற்றும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் நம்மைக் காப்பாற்றுவார், பாரதிய ஜனதா காப்பாற்றிவிடும், நடுவர் மன்றம் உரிமைகளைப் பெற்றுத்தரும், தமிழ்நாட்டு சட்ட மன்றத்தில் தீர்மானம் போட்டால்**



**சாதித்துவிடலாம் என்று தமிழர்களை நம்பவைக்காதீர்கள். இந்திய தேசியம் அலறுவதில் தான் தமிழர் உரிமை மலரத் தொடங்கும். இந்திய தேசியத்தையும் அதைத்தாங்கிப்பிடிக்கும் தூண்களையும் தாக்கத் தொடங்குங்கள்.**

1980 களில் பேராசிரியர் வெற்றிமணி அவர்களால் தொகுக்கப்பட்டு திராவிடர் கழகத்தால் வெளியிட்ட ‘வஞ்சிக்கப் படும் தமிழ்நாடு’ நூலில் பெரியாறு அணை, காவிரி சிக்கல்கள் விரிவாகப் பேசப்பட்டு அதன் எதிரிகள் பார்ப்பனர்களும் இந்திய தேசியமும் என்பது உறுதிபடுத்தப் பட்டது. அதற்குப் பிறகு நடந்த ஆற்றுநீர் உரிமை தொடர்பான பரப்புரைகளும், போராட்டங் களும் முதன்மை எதிரிகளான பார்ப்பனர்களை எதிர்த்தோ, இந்திய தேசியத்தை எதிர்த்தோ திட்டமிடப்படவில்லை. அடையாளம்கூட காட்டப்பட வில்லை. நீண்ட இடைவெளிக்குப் பிறகு ம.தி.மு.க பொதுச்செயலாளர் வை.கோ அவர்கள் “அணை உடைந்தால் நாடு உடையும்” என சரியான திசைநோக்கித் திரும்பியிருக்கிறார். இந்தக் கருத்தையும், கருத்தை வெளியிடும் நேர்மையும், துணிச்சலும் கொண்ட வைகோ வை வரவேற்போம். இந்த நேரத்திலாவது, இனி மேலாவது மாற்று அரசியலில் ஆர்வமுள்ள இயக்கங்கள், தோழர்கள், இளைஞர்கள் அடுத்த நிலை நோக்கி முன்னேற வேண்டாமா? முதன்மை எதிரிகளை நோக்கி புறப்பட வேண்டாமா?

**– அதி அசுரன்**

( www. keetru.com இல் வெளியான கட்டுரை )

# அணு சக்தியா? அழிவு சக்தியா

**1989 ஆம் ஆண்டு 'பெரியார் மையம்' வெளியிட்ட அணுசக்தியா? அழிவுசக்தியா? என்ற நூல் தற்போதைய தேவை கருதி சிறு சிறு திருத்தங்களுடன் வெளியிடப்பட்டுள்ளது. புள்ளிவிபரங்கள் 1989க்கு முன்பு தொகுக்கப்பட்டவை. திட்டத்திற்கான தொகைகள், செலவுகள், இழப்புகள் போன்றவை 22 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த தொகைக்கான மதிப்புகள் என்பதை நினைவிற்கொண்டு படியுங்கள்.**

### 1. அணுசக்தி என்றால் என்ன?

*யுரேனியம் போன்ற பெரிய அணுவை நியூட்ரான், போன்ற துகள்களைக் (Particles) கொண்டு மோதும் போது அந்த பெரிய அணு இரண்டு சிறிய அணுக்களாகப் பிளவுபடும், அவ்வாறு பிளவுபடும் போது அதிக வெப்பம் வெளிப்படும். பிளவுபட்டு உருவான அணுக்கள் கதிர்வீச்சை வெளியிடும். இந்த நிகழ்ச்சியில் வெளிப்படும் வெப்பமே அணுசக்தியாகும்.*

### 2. அணுசக்தி நிலையம் (Nuclear Power Reactor) என்றால் என்ன?

*மேற்சொன்ன வெப்பத்தை பயன்படுத்தி ஜெனரேட்டரை இயக்கி மின்சாரம் உற்பத்தி செய்யும் இடமே அணுசக்தி நிலையமாகும்.அணுமின் சக்தி நிலையத்தின் ஆயுட்காலம் சுமார் 25 வருடங்கள் ஆகும்.*

### 3. ஆயுட்கால முடிவில் அணுமின்சக்தி நிலையத்தில் உள்ள பிரச்சினைகள் யாவை?

*ஆயுட்கால முடிவில் அணுமின் சக்தி நிலைய மய்யப் பகுதியில் (Core) கதிரியக்கப் பொருள்கள் நிரம்பியிருக்கும். எனவே, ஆயுட்கால முடிவில் அணுசக்தி நிலையத்தைப் பாது காப்பான முறையில் மூடி செயலிழக்கச் (Decommission) செய்ய வேண்டும். அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் உள்ள அணுசக்தி நிலையங்கள் சில தமது ஆயுட்காலத்தை முடித்துள்ளன. ஆனால் அவற்றை செயலிழக்கச் செய்யும் பணி இன்னும் முடியவில்லை.*



*உதாரணமாக இங்கிலாந்தில் விண்ட்ஸ்கேல் என்னும் இடத்தில் 33 மெகா - வாட் அணுசக்தி நிலையம் 1963-ல் செயல்படத் தொடங்கி 18 வருடமே செயல்பட்டு மேலும் செயல்பட இயலாத நிலையில் 1981-ல் செயல் இழக்கச் செய்ய முடிவு செய்யப்பட்டது. 1988ல் இந்தப்பணி முடியும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இன்னும் முடியவில்லை. இந்தச் செயல் இழக்கச் செய்யும் பணிக்காக இதுவரை ரூ. 70 கோடி (அன்றைய மதிப்பில்) செலவிடப்பட்டது. ஒரு அணு சக்தி நிலையத்தைப் புதிதாக கட்ட ஆகும் செலவைவிட அதனை செயலிழக்க செய்யும் செலவு அதிகம் என்ற உண்மை வெளிப் படத் தொடங்கியுள்ளது. இதனை 'புதிய விஞ்ஞானி (New Scientist) என்னும் ஆங்கில அறிவியல் 11 - 12 - 1986 தேதியிட்ட இதழ் வெளியிட்டுள்ளது.*

### 4. அணுசக்தி என்பது சிக்கனமானதா?

*அணுசக்தி நிலையம் கட்ட ஆகும் செலவு அதன் ஆயுள் காலம் முழுவதும் தனது முழுத்திறன் அளவுக்கு இயங்காமல் இருப்பது, அதனைச் செயலிழக்கச் செய்ய ஆகும்செலவு, அதன் கழிவுகளை பாதுகாப்பாக அகற்ற ஆகும் செலவு மற்றும் அணுக் கதிர் கசிவினால் ஏற்படும் உயிரின ஆபத்துகள் மற்றும் அதன் எதிர்விளைவுகளை சரிசெய்ய ஆகும் செலவினங்கள் ஆகியவற்றை கணக்கில் கொண்டால் அணுசக்தி சிக்கனமானதல்ல. இதனை வால்டர் பேட்டசன் (Walter Petterson) என்பவரின் 'அணுசக்தி' (Nuclear Power-1981 Penguin) என்ற ஆங்கில நூல் தெளிவாக விளக்குகிறது.*

### 5. அணுசக்தி நிலையத்தில் கசிவுகள் காரணமாகவும், விபத்துகள் காரணமாகவும் வெளிப்படும் கதிர்களால் (Radiations) ஏற்படும் ஆபத்துகள் யாவை?

*கதிரியக்க நிகழ்ச்சி பல்லாயிரக்கணக்கான வருடங்கள் நிகழ வாய்ப்புண்டு, இந்த நிகழ்ச்சியின் மூலம், ஆல்ப்பா, பீட்டா, காமா என்ற மூன்று வகை கதிர்கள் வெளிப்படுகின்றன. இவை எல்லா உயிரினங்களிலும் பாதிப்பு ஏற்படுத்தக்கூடியவை. இந்த கதிரியக்கப் பாதிப்புகளை இரண்டு வகைகளாக பிரிப்பர். சில வாரங்களில் பாதிப்பு விளைவு வெளிப்படுவது முதல் வகை*

என்றும், அதன் பின்னும் சிலசமயம் பல வருடங்கள் கழித்து பாதிப்பின் விளைவு வெளிப்படுவது இரண்டாவது வகை என்றும் பிரிக்கப்படுகிறது. இது தவிர அந்தப் பாதிப்பின் விளைவு உடற்கூறு சார்ந்தது (Somatric) என்றும், மரபு வழி சார்ந்தது என்றும் பிரிப்பர். பாதிக்கப்பட்ட நபரின் உறுப்புகள் பாதிக்கப் படுவது உடற்கூறு சார்ந்த வகையாகும். பாதிக்கப்பட்ட நபரின் உறுப்புகள் குழந்தைக்கோ அல்லது பிந்திய சந்ததிக்கோ பாதிப்பு ஏற்படுவது மரபு வழி சார்ந்த வகையாகும். மரபு வழி சார்ந்த வகை பாதிப்பை கண்டுபிடிக்கும் அளவுக்கு இன்னும் அறிவியல் முன்னேறவில்லை.

கடுமையான கதிர்வீச்சு தசைகளையும், ரத்தத்தின் சிகப்பு அணுக்களையும் பாதிக்கும். அதிக கதிர்வீச்சு வயிற்றையும், சீரணக் குடல் அமைப்பையும் பாதிக்கும். தீவிரமான (Extreme) கதிர்வீச்சு மய்ய நரம்பு அமைப்பைப் (Central Nervous System) பாதிக்கும். சிறிய கதிர்வீச்சு நீண்ட காலத்திற்குப் பின் பாதிப்பை ஏற்படுத்தும். அய்ந்து வருடங்களுக்குப் பின் லிக்யூமியா என்னும் கான்சர் நோய் வரும். 20 வருடம் கழித்து சில வகை கான்சர் நோய் வரலாம். கண்ணில் காட்ராக்ட் நோய் வரலாம். தோல் பாதிக்கப்படலாம். பிள்ளை பெறும் சக்தி இழக்கப்படலாம்.

தாவரத்தில் கலக்கும் கதிர்வீச்சு, அதை உண்ணும் விலங்கு களின் மாமிசம் மற்றும் பால் ஆகியவற்றை உட்கொள்ளும் மனிதர்களைச் சேர்த்து பாதிப்பை ஏற்படுத்தும். இப்படி பல வகையான பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

**6. மற்ற விபத்துகளால் வரும் ஆபத்துக்கும், கதிரியக்கத்தால் வரும் ஆபத்துக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு என்ன?**

1) மற்ற பெரும்பாலான விபத்துக்களால் வரும் ஆபத்து ஒரு குறிப்பிட்ட மனிதனோடு அல்லது மனிதர்களோடு முடிவடைந்து விடுகின்றது. கதிரியக்க ஆபத்து தனி மனிதனோடு நிற்காமல் சந்ததிகளையும் பாதிக்கிறது.

2) கதிரியக்க வீச்சு பெருமளவுக்கு இருக்கும்போது பாதிக்கப்பட்ட பகுதிகள் மனிதன் மற்றும் உயிரினங்கள் வாழும் தகுதியை இழந்து விடுகிறது. இது எப்போது சீரடையும் என்று சொல்ல முடியாது.



3) மற்ற எந்த ஒரு பெரிய விபத்திலும் ஏற்படும் மனித உயிர் இழப்பு எண்ணிக்கையை விட அணுமின் நிலைய பெரிய விபத்தின் காரணமாக வரும் கதிரியக்கத்தால் ஏற்படும் மனித உயிர் இழப்பு மிக அதிகமாக இருக்கும். இலட்சக்கணக்காகவும் இருக்கும், பெரிய நகரங்களே நாசமாகிவிடும். (எ.கா.) சோவியத்தில் செர்னோபிள் விபத்து. உதாரணமாக, கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் பெரியவிபத்து ஏற்பட்டால் சென்னை, செங்கல் பட்டு உள்ளிட்ட அருகாமை பகுதி மக்களை அப்புறப்படுத்தியாக வேண்டும். மீண்டும் பழைய மாதிரியில் அப்பகுதியில் மக்களை குடியமர்த்துவது கேள்விக் குறியாகி விடும்.

4) எதிரி நாடு குண்டு வீசி அணுமின் நிலையத்தை தாக்கினால் ஏற்படும் விபத்து ஒரு அணுகுண்டு வெடிப்பதால் ஏற்படும் விபத்துக்கு சமமாகும். எனவே ஒரு நாட்டில் உள்ள அணுமின் நிலையங்கள் எதிரி நாட்டின் கைவசம் உள்ள இலவச அணுகுண்டு களாகும்.

**7. இப்படிப்பட்ட பாதிப்புகளை ஏற்படுத்தும் கதிரியக்க கசிவுகளும் விபத்துகளும் அணுசக்தி நிலையங்களில் ஏற்பட்டது உண்டா?**

1952 டிசம்பர் 12-ல் கனடா நாட்டில் சாக் நதி அருகில் இருந்த அணு சக்தி நிலையத்திலும், 1957-ல் இங்கிலாந்தில் விண்ட்ஸ்கேல் அணுசக்தி நிலையத்திலும், 1947- 58ல் ரஷ்யாவில் கிஷ்டின் அருகில் உள்ள அணுசக்தி நிலையத்திலும், அமெரிக்காவில் 1961 சனவரி 3-ல் இடாகோ மாநில அணு சக்தி நிலையத்திலும், 1966 அக்டோபர் 5-ல் டிடாராய்ட் அணுசக்தி நிலையத்திலும் பெரிய விபத்துகள் நடந்தன.

இந்த வரிசையில் பெரிய விபத்தாக 1979 மார்ச் 28-ல் அமெரிக்காவில் மூன்று மைல் தீவு அணுசக்தி நிலையத்தில், அணுசக்தி நிலைய மய்யப் பகுதி (Core) உருகி ஆபத்தான கதிர்கள் வாயு மண்டலத்தில் (Atmosphere) கலந்தன. இதனால் பல நூற்றுக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர். அந்த அணுசக்தி நிலையத்தை சுற்றி வாழ்ந்த மக்கள் அப்புறப் படுத்தப்பட்டனர். பாதிக்கப்பட்ட மய்யப் பகுதியை தொலைக் கட்டுப்பாட்டு தொலைக்காட்சி ஆய்வு (Remote TV Inspection) 1982 சூலையில் தான் செய்ய முடிந்தது. அதன்பின் உலகின் மிகப் பெரிய விபத்து 1988 ஏப்ரல் 24ல் ரஷ்யாவில் செர்னோபிள்

அணுசக்தி நிலையத்தில் ஏற்பட்டது. ரஷ்யாவை தவிர்த்து 20 நாடுகளைப் பாதித்து 2000 கிலோமீட்டர் வரை கதிர்கள் இந்த விபத்தினால் பரவின. தொலைக்கட்டுப்பாட்டு ஹெலி காப்டர்கள் மூலம் 5000 டன் சாந்து மண், ஈயம், போரான் போன்றவை மேலும் கதிர்கள் பரவுவதை தடுப்பதற்காக அணுசக்தி நிலைய மய்யத்தின் மீது கொட்டப்பட்டன. பின்னர் 5000 டன் உலோக அமைப்பு களையும், 3,00,000 கியூபிக் மீட்டர் கான்கிரீட்டையும் கொண்டு அதனை மூடினர். செர்னோ பிளைச் சுற்றி 100கி.மீ வரை வாழ்ந்து வந்த மக்களை 1,100 பேருந்துகளைப் பயன்படுத்தி அரசு அப்புறப்படுத்தியது. செர்னோபிள் விபத்தினால் அய்ரோப்பிய நாடுகளில் காய்கறி, தானியம், பால், வெண்ணெய் உள்ளிட்ட அனைத்து விவசாய, கால்நடை விவசாயப் பொருள்களும் மனிதர்கள் உண்ண லாயக்கற்றவை என தடை செய்யப்பட்டன.

செர்னோபிள் விபத்தால் போலந்து ரூ. 70 கோடி மதிப்பு இழப்பையும், இத்தாலி ரூ. 200 கோடி மதிப்பு இழப்பையும், மேற்கு ஜெர்மனி ரூ. 650 கோடி இழப்பையும் அறிவித்துள்ளனர். மேற்கு ஜெர்மனி அரசு தமது நாட்டில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ. 480 கோடி நஷ்ட ஈடு வழங்க ஒப்புக் கொண்டுள்ளது. செர்னோபிள் விபத்துக்கு முன் அதன் தலைமைப் பொறியாளர் நிக்கோலாய் போமின் என்பவர் செர்னோபிள் அணுசக்தி நிலையத்தில் பெரிய விபத்துக்கான வாய்ப்பு 10,000 வருடங்களில் ஒன்றாக இருப்பதாகவும், மூன்று பாதுகாப்பு வழிகளுடன் எந்த விபத்திலிருந்தும் பாதுகாக்கக் கூடிய நம்பிக்கையான கட்டுப்பாடு முறைகள் இருப்பதாகவும் ‘சோவியத் வாழ்க்கை’ (Soviet Life) என்ற இதழில் தெரிவித்திருந்தார். விபத்திற்குப் பின் இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

அமெரிக்காவில் The Public Critical Mass Energy Product என்னும் பொதுமக்கள் கண்காணிப்பு அமைப்பு 1985-ல் அமெரிக்காவில் 3000 அணு விபத்துக்கள் நடந்துள்ளதாக அறிவித்துள்ளது. ஒரு ஜெர்மன் அறிக்கைப்படி 1970-களில் மூன்று நாட்களுக்கு ஒரு அணு விபத்து நடந்து வந்திருந்தாலும், ஜெர்மன் அரசு 14 அணு விபத்துகள் மட்டுமே நடந்ததாக அறிவித்தது. பிரிட்டனில் விண்ட்ஸ்கேல் அணுசக்தி நிலைய விபத்தைத் தொடர்ந்து தொடரப்பட்ட வழக்கின் காரணமாக 1950க்கும் 1977க்கும் இடைப்பட்ட காலத்தில் 177 விபத்துகள் நடந்திருப்பதை



அரசு ஒத்துக்கொண்டது. Der Spiegel என்னும் மேற்கு ஜெர்மனி இதழின் படி சர்வதேச அணு சக்தி அமைப்பு (International Atomic Energy Agency) 250 கசிவு விபத்துக்களை வெளி உலகிற்குத் தெரியாமல் மறைத்துள்ளது.

இவ்வாறு உலககெங்கும் நடக்கும் அணுசக்தி நிலைய விபத்துகள் அரசுகளால் மறைக்கப்பட்டு வந்தாலும், மக்களின் விழிப்புணர்ச்சியுடன் கூடிய போராட்டங்கள் உண்மைகளை வெளிக்கொணர்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகளின் முக்கியத் துவத்தை கூட்டியுள்ளன.

**8. இந்தியாவில் எவ்வளவு அணுசக்தி நிலையங்கள் செயல்பாட்டில் உள்ளன? அவற்றில் விபத்துக்கள் நடத்தப்படுகின்றனவா?**

இந்தியாவில் சுமார் 6 அணுசக்தி நிலையங்கள் செயல் பாட்டில் உள்ளன. சுமார் 9 அணுசக்தி நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், அணு சக்தி தொடர்புடைய நிலையங்கள் சுமார் 40 உள்ளன.

தமிழ்நாட்டில் கல்பாக்கத்தில் அணுசக்தி நிலையங்கள் 2 செயல்படுகின்றன. திருநெல்வேலி அருகே ஒரு அணுசக்தி நிலையம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள அணுசக்தி நிலையங்களில் உள்ள ஆபத்து மிக்க கதிரியக்க கழிவுகளை திருநெல்வேலி அருகே கூடன்குளம் பகுதியில் புதைக்க அரசு சில வருடங்களுக்கு முன் அறிவித்து எதிர்ப்பின் காரணமாக செயல்படுத்தவில்லை. இப்போது திருநெல்வேலி அருகே திட்டமிடப்பட்டுள்ள அணுசக்தி நிலையப் பகுதியில் மேற்சொன்ன திட்டம் ரகசியமாக மேற்கொள்ளப்படுமா என்பது தெரியவில்லை.

இந்தியாவில் அணுசக்தி நிலையங்களின் கசிவுகளும், விபத்துகளும் ஏற்பட்டிருக்கின்றன. Der Spiegel என்ற ஜெர்மன் இதழின்படி சர்வதேச அணுசக்தி அமைப்பு மறைத்த 250 கசிவுகளில் இந்தியாவில் தாராப்பூர் அணுசக்தி நிலையத்தில் ஏற்பட்ட கசிவும் ஒன்றாகும். பேரா. திரேந்திர சர்மா என்பவர், 1972-ல் தாராப்பூர் அணுசக்தி நிலையத்தில் ஒரு விபத்து நடந்து இரு இளம் பொறியாளர்கள் இறந்ததாக அறிவித்துள்ளார். இவர்

எழுதிய 'India's Nuclear Estate' என்ற நூலில் இந்தியாவில் ஏற்பட்ட விபத்துக்களைப் பற்றி விவரமாகத் தெரிவித்துள்ளார். இந்தியாவில் காண்ட்ராக்டர்கள் மூலம் சாதாரண தொழிலாளர்கள் Casual Labour எளிதில் கிடைப்பதால் மேல்நாடுகளில் தொலைக் கட்டுப்பாடு மூலம் செய்யப்படும் ஆபத்தான வேலைகளைச் செய்ய இந்த சாதாரண தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இத்தொழிலாளர்கள் அனைவரும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினரே ஆவர். இவர்களில் யாரும் பார்ப்பனர் கிடையாது. ஆனால் அணுஆய்வுத்துறையில் உயர்பதவிகள் அக்கிரகாரமாய் இருப்பதற்கு ஆதாரம் இதோ:

| மொத்தம் | எஸ்.சி | பி.சி | பார்ப்பனர்கள் |
|---|---|---|---|
| *34* | *0* | *0* | *34* |

1972-ல் தாராப்பூர் அணுசக்தி நிலையத்திற்குச் சென்ற அமெரிக்க நிபுணர் கிளிபோர்டு பெக் (Clifford Peck) அங்கு கதிரியக்க கழிவுகளை நீண்ட குச்சிகளைக் கொண்டு சாதாரண தொழிலாளர்கள் கையாளும் பணியில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டார். 250 வேலையாள்கள் மொத்தமாகப் பணியாற்றும் அளவுக்கு திட்டமிடப்பட்டிருந்த அந்த அணுசக்தி நிலையத்தில் 1972-க்குள் 1300 வேலையாட்கள் பணியிலிருந்து அகற்றப்பட்டது அறிந்து அவர் அதிர்ச்சி அடைந்தார். அதிகபட்ச கதிரியக்க பாதிப்புக்குள்ளானதே இந்தப் பணி அகற்றலுக்கு காரணமாகும். பணிப் பாதுகாப்பு கதிர்வீச்சு பாதுகாப்பு போன்றவை இல்லாமல் இப்படிப்பட்ட கொடுமைகளை அனுபவிப்பவர்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களே ஆவர்.

1979-ல் தாராப்பூர் அணுசக்தி நிலையத்தில் ஒரு விபத்து ஏற்பட்டது. அதே ஆண்டு ஜூலை 24ல் கல்பாக்கம் அணுசக்தி நிலையத்தை பிரதமர் துவக்கி வைத்துக் கொண்டிருக்கையில் ஒரு விபத்து ஏற்பட்டது. 1982 மார்ச் 4-ல் ராஜஸ்தான் ராப்ஸ் அணுசக்தி நிலையத்தில் விபத்து ஏற்பட்டது. ரூ. 8 கோடி செலவு செய்தும் இன்னும் பழுது பார்க்கும் பணி முடியவில்லை. கதிரியக்க கசிவை நிறுத்த முடியவில்லை. இது 15 - 6 - 86 இந்தியன் எக்ஸ்பிரஸ் மலரில் வெளியானது. பூகம்பம் ஏற்பட வாய்ப்புள்ள



பகுதிகளிலு.ம் இந்தியாவில் அணுசக்தி நிலையம் கட்டியுள்ளார்கள். அய்தராபாத்தில் உள்ள அணு எரிபொருள் வளாகத்தில் கழிவுப் பொருள்களை பாதுகாப்பாக வைக்காததால் அது வெடித்து ஒரு பெண்ணும், 3 பையன்களும் இறந்தனர். "புரோப்'' (Probe) இதழ் இதனை வெளியிட்டது. இவ்வாறு இந்திய அணுசக்தி நிலையங்களில் கசிவுகளும், விபத்துகளும் நடந்து வருகின்றன.

### 9. அணுசக்தி அபாய சம்பவங்களை எதிர்த்து இதுவரை மக்கள் போராட்டங்கள் நடைபெற்று இருக்கின்றனவா? அவற்றின் சாதனைகள் யாவை?

உலக அளவில் அணுசக்தி அபாயத்தை எதிர்த்து Green Peace என்னும் இயக்கம் 1970ல் கனடாவில் துவக்கப்பட்டது. அணுசக்தி அபாயம் மட்டுமின்றி சுற்றுபுற சூழல் பாதுகாப்பும் இதன் நோக்கமாகும். வன்முறையற்ற நேரடிப் போராட்டங்களில் இந்த அமைப்பு ஈடுபடுகிறது. உலக அளவில் பல நாடுகளில் அதன் உறுப்பினர் உள்ளனர். அணுக்கரு கழிவுகளை கடலில் கலப்பதை எதிர்த்து இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி, ஹாலந்து, பெல்ஜியம், சுவிட்சர்லாந்து, சோவியத் ரஷ்யா, அமெரிக்கா, ஜப்பான் போன்ற பல நாடுகளில் இந்த அமைப்பு போராட்டங்கள் நடத்தி உள்ளது. இதன் காரணமாக பல நாடுகள் தமது அணுசக்தி கொள்கையை மறுபரிசீலனை செய்யத் தொடங்கின. சுவீடனில் கட்டி முடிக்கப்பட்ட 9 அணுசக்தி நிலையங்களையும், பாதி கட்டி முடிக்கப்பட்ட நிலையில் இருந்த 2 அணுசக்தி நிலையங்களையும் 2010-ம் ஆண்டுக்குள் மூடிவிட கருத்து வாக்கு எடுப்பின் மூலம் அரசு முடிவு செய்து விட்டது.

இத்தனைக்கும் சுவீடன் மின்தேவையில் 30% அணுசக்தி நிலையம் ஈடு செய்து இருந்தது. ஆஸ்திரிய நாட்டில் கட்டி முடிக்கப்பட்ட ஒரே ஒரு அணு சக்தி நிலையமும் துவக்கப் படாமல் இருக்கிறது. டென்மார்க் நாட்டிலும் இதே நிலைதான். செர்னோபிள் விபத்துக்குப் பின் இந்தப் போக்கு தீவிரமானது. யூகோஸ்லேவியா நெதர்லாந்தில் நடந்த கருத்து வாக்கெடுப்பில் 70% மக்கள் அணுசக்தி திட்ட வளர்ச்சியை எதிர்க்கவே, புதிய அணுசக்தி திட்டங்கள் கைவிடப்பட்டன. மேற்கு ஜெர்மனியில்

நடந்த கருத்து வாக்கெடுப்பில் 60% மக்கள் புதிய அணுசக்தி நிலையம் கட்ட எதிர்ப்பு தெரிவித்தார்கள். 54% மக்கள் இருக்கும் அணுசக்தி நிலையங்களையும் மூட ஆதரவு தெரிவித்தார்கள். பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, இத்தாலி முதலிய நாடுகளில் அணுசக்தி எதிர்ப்பு அரசியல் பிரச்சனையாகிவிட்டது என்றும், மேற்கு ஜெர்மனியில் சமூக ஜனநாயக கட்சி 10 வருடத்தில் மேற்கு ஜெர்மனி அணுசக்தி நிலையங்களை மூடுமாறு கோரியுள்ளது என்றும், இத்தாலியில் சோஷலிஸ்டுகள் இதே கோரிக்கையை வலியுறுத்துகிறார்கள் என்றும், பிரிட்டனில் தொழிற்சங்க காங்கிரஸ் மறு பரிசீலனை முடியும்வரை புதிய அணுசக்தி திட்டங்களை கிடப்பில் போடுமாறு கோரியுள்ளதாகவும் நியூஸ்வீக் (News Weak) 15-9-86 இதழ் வெளியிட்டுள்ளது. பிலிப்பைன்ஸில் பல கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப் பட்ட ஒரே அணுமின் நிலையத்தையும் மூடிவிட அரசு முடிவு செய்துள்ளது.

இந்தியாவிலும் அணு சக்தி அபாய எதிர்ப்பு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. கேரளாவில் கொச்சியில் நடந்த ஆய்வரங்கில் கொத்தமங்கலத்தில் அமைக்கப்பட இருக்கும் அணுமின் நிலையத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதனை 28-6-84 இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்டுள்ளது. கேரளாவில் உள்ள மக்கள் எதிர்ப்பு காரணமாக பெரியாறு நதியின் வடகரைகளில் பூதகான் கெட்டுவில் (Poothan Kettu) தொடங்க இருந்த 2000 மெகாவாட் அணுசக்தி நிலையம் கைவிடப்பட்டது. தென் மாநிலங்களில் அணுசக்தி நிலையம் இல்லாத ஒரே மாநிலம் கேரளா ஆகும். கர்னாடகா மாநிலத்தில் காய்கா மாவட்டத்தில் துவக்கப்பட உள்ள அணுசக்தி நிலையத்தை எதிர்த்து அந்தப் பகுதி மக்கள் பெரிய போராட்டங்களை தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். குஜராத் கக்ரபாரா பகுதியில் அணுசக்தி நிலையத்தை எதிர்த்து மக்கள் போராட்டம் நடைபெற்று வருகிறது. எனவே உலகிலும், இந்தியாவிலும் அணுசக்தி அபாயத்தை எதிர்த்து பல போராட்டங்கள் நடைபெற்று வந்துள்ளன. இதன் விளைவாக பல அரசுகள் அணுசக்தி நிலையங் களைக் கைவிட்டு வருகின்றன. பல அரசுகள் அணுசக்தி கொள்கை களை மறுபரிசீலனை செய்து வருகின்றன. பொதுவாக பாதுகாப்பு அம்சத்தின் முக்கியத்துவம் கூடியுள்ளது.



**10. கல்பாக்கம் அணுமின் நிலையம் சாதாரணமாகச் செயல்படும் போது ஏற்படும் ஆபத்துகள் யாவை?**

பொதுவாக அணுசக்தி நிலையம் செயல்படும்போது கதிரியக்க கழிவுகளில் ஒரு பகுதி வாயு மண்டலத்தில் கலக்கப்படும். மேலும் ஒரு பகுதி அருகில் உள்ள கடலில் கலக்கப்படும். மிகவும் ஆபத்தான கதிரியக்க கழிவுகள் நிலையத்தில் மய்யப் பகுதி யிலேயே இருக்கும். இந்தக் கழிவுகள் எவ்வாறு பாதுகாப்பாக அகற்றி, பாதுகாப்பாக வைப்பது என்பது உலக அளவில் சிக்கலாகவே உள்ளது. வாயு மண்டலத்தில் கலப்பது குறிப்பிட்ட அளவுக்கு அதிகமானால் அருகாமைப் பகுதி மக்களும், உயிரினங்களும், விவசாயமும் பாதிக்கப்படும். அதேபோல் கடலில் கலக்கப்படுவது ஒரு குறிப்பிட்ட அளவை தாண்டுமானால் கடல் ஆபத்தான கதிரியக்க அளவைப் பெற்று, அந்தப் பகுதி மீனவர்களும், மீன் உள்ளிட்ட கடல்வாழ் உயிரினங்களும், அவற்றை உட்கொள்ளும் மனிதர்களும் பாதிக்கப்பட வாய்ப்புண்டு.

சில ஆண்டுகளுக்கு முன் ஜப்பானில் சுருகா அணுசக்தி நிலையம் அருகே உள்ள கடலில் கதிரியக்கம் அபாய நிலையில் இருந்தது. உடனே அதிகாரிகள் மார்க்கெட்டில் விற்று வந்த மீன்களை தடை செய்து அப்புறப்படுத்தினர். பிரிட்டனில் லிண்ட்ஸ்கேல் அணுசக்தி நிலைய கதிரியக்க கழிவுகள் கடலில் கலந்து இன்று உலகிலேயே மிகவும் அதிக கதிரியக்கமுள்ள ஆபத்தான பகுதியாக அயரிஷ் கடல் இருக்கிறது. கேரளாவில் ஆல்வாயில் தோரியம் உற்பத்தி செய்யும் நிலையத்தின் கதிரியக்க கழிவுகள் 1981 வரை அரபிக் கடலில் கலக்கப்பட்டு வந்தது. பின் மக்கள் எதிர்ப்பு காரணமாக அது நிறுத்தப்பட்டது. கல்பாக் கத்தில் இப்போது கதிரியக்க கழிவுகள் கடலில் கலக்கப்படுகிறது. 10 சதுர மைல் பரப்பிற்கு மீனவர்கள் இந்த பகுதியில் மீன் பிடிக்கக்கூடாது என்ற நிபந்தனையிலும், கடலில் கதிரியக்க அளவுகளை தொடர்ந்து கண்காணித்து குறிப்பிட்ட அளவுக்கு மேல் கதிரியக்க அளவு இருந்தால் கழிவுகள் கடலில் கலப்பது நிறுத்தப்படுகிறது என்ற நிபந்தனையிலும் இவ்வாறு கலப்பது நடக்கிறது. சில வருடங்களுக்கு முன் கல்பாக்கம் அருகாமை யிலுள்ள கிராமப்புறங்களில் விவசாயத்தின் பயிரின் அடியில் நீர் இருந்தும் இவைகள் கருகி விவசாயம் பாதிக்கப்பட்டது.

கல்பாக்கம் அணுசக்தி நிலையத்தில் காற்றில் கலக்கும் கதிரியக்க கழிவுகள் அளவுக்கு அதிகமாக இந்த பாதிப்பை ஏற்படுத்தி யிருக்கலாம். கதிரியக்கம் கண்ணுக்கு தெரியாது. ஜி. எம், கணக்கி போன்ற கதிர்வீச்சு அளக்கும் கருவிகள் மூலமே அதை உணர முடியும். இப்போதைக்கு அரசிடம் மட்டுமே இக்கருவிகள் உள்ளன.

எனவே தகவலுக்கு அரசை மட்டுமே நம்ப வேண்டி யுள்ளது. மாறாக சமூக சேவை அமைப்புகளிடம் இக்கருவி இருந்தால் விபத்து நடப்பதை, கசிவு நடப்பதை உடனே கண்டு பிடித்து உடனே உணரமுடியும்.

**11. கதிர்வீச்சில் பாதுகாப்பு அளவு என்று ஏதும் உள்ளதா?**

சர்வதேச கதிர்வீச்சு பாதுகாப்பு அமைப்பு (ICRP-International Commission For Radiation Protection) ஒரு மனிதர் கதிர்வீச்சினால் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டால் ஆபத்து இல்லை என்று தீர்மானிக்கிறது. இந்த அளவும் கதிர்வீச்சுப் பற்றிய அறிவு வளரவளர குறைக்கப்பட்டே வந்துள்ளது. இவ்வளவையும் நிர்ணயிக்கும் காரணியாக ஜப்பானில் அணுகுண்டு வீசப்பட்ட பொழுது அம்மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பும், அவர்கள் இவ்வளவு கதிர்வீச்சை வாங்கியிருப்பார்கள் என்று கணக்கீடுகள் மூலம் கணிக்கப்பட்ட அளவையும் இணைத்துப் பார்ப்பதாக உள்ளது. ஆனால் பின்பு முதலில் கணக்கிட்டதைவிட குறைந்த அளவுள்ள கதிர்வீச்சே அம்மக்கள் பெற்றார்கள் என்பது தெரிந்தவுடன் ICRP சில விதிமுறைகளை முடிவு செய்துள்ளது. அதன்படி எவ்வளவு குறைந்த அளவாயினும் கதிர்வீச்சு தீமையானதே. கூடுமானவரை அதை தவிர்க்க வேண்டும். தவிர்க்க இயலாத நிலையில் தம்மால் முடிந்தவரை குறைந்த அளவே கதிர்வீச்சு உள்ள பகுதிகளில் வேலை செய்ய வேண்டும்.

**12. அணுசக்தி நிலையம் ஒரு பகுதிக்கு வருவதால் அந்தப் பகுதியில் அபிவிருத்தி ஏற்படுமா?**

இந்தியாவில் அணுசக்தி நிலையத்தை சுற்றி 4 கி.மீ. வரை மக்கள் குடியிருப்பு அனுமதிக்கப்படாது. 16 கி.மீ வரைக்கும் 10,000த்துக்கும் அதிகமான மக்கள் வசிக்க அனுமதிக்கப்பட



மாட்டாது. 40 கி.மீ வரை 1 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வசிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். இந்த நிபந்தனைகளை மீறும் கிராமங்களும், ஊர்களும் அகற்றப்படும். பல கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் அணுசக்தி நிலையத்தில் சில நூறு பேருக்கே வேலையுண்டு. அதிலும் மத்திய அரசில் பிற்படுத்தப் பட்டோருக்கு இட ஒதுக்கீடு இல்லாததால், தாழ்த்தப் பட்டோருக்கான ஒதுக்கீடு மண்டல குழு அறிக்கைப்படி சரியாக அமுல் படுத்தப்படாததால், மத்திய அரசு வேலைக்கு ஆள் தேர்ந்தெடுப்ப தால் அந்தப் பகுதி மக்களுக்கு வேலை கிடைக்கும் என்ற உறுதி கிடையாது. கதிர் இயக்க ஆபத்தின் காரணமாக நிலங்களின் விலை குறைய வாய்ப்புண்டு. சுமார் 100 கி.மீ. வரை பெரிய தொழிற் சாலைகள் புதிதாக வர வாய்ப்பு குறையலாம்.

**13. அணுசக்தியை விட்டால் வேறு மாற்று என்ன இருக்கிறது?**

இந்தியாவில் மய்ய மின்சார அமைப்பின் (Central Electricity Authority) மதிப்பீட்டுப் படி 75,000 மெகாவாட் மொத்த நீர் மின் திட்ட வாய்ப்பில் 12% மட்டுமே நீர்மின் நிலையங்கள் மூலம் பயன்படுத்தப்படுகின்றன. இந்தியாவில் 1120 கோடி டன் நிலக்கரி மண்ணில் உள்ளது. இந்தியாவில் மின்சாரம் கொண்டு செல்லும் போது சுமார் 20% விரயமாகிறது. சீனாவில் இந்த வகை இழப்பு 7.57% மட்டுமே. இது தவிர சூரிய ஆற்றல், புவி வெப்ப ஆற்றல், காற்று ஆற்றல், கடல் அலை போன்ற பல வழிகளில் மின்சாரம் உற்பத்தி செய்ய வாய்ப்புள்ளது. பம்பாயில் கிடைக்கும் இயற்கை எரிவாயுவை சுமார் 1500 கி.மீ. குழாய் மூலம் வட மாநிலங்களுக்கு அனுப்பி மின் உற்பத்தியும், தொழில் உற்பத்தியும் நடைபெறுகிறது. மேலும் இன்றும் பல நூறு கோடி ரூபாய் மதிப்புடைய இயற்கை எரிவாயு பம்பாயில் எரித்து விரயமாக்கப் படுகிறது.

குழாய் மூலம் அதனை தமிழ்நாடு வரை கொண்டு வந்தால் தென் மாநிலங்களின் மின் பற்றாக்குறை தீரும். தொழில் வளரும். தமிழ்நாட்டை பொறுத்தவரை நெய்வேலி அனல்மின் நிலையம் மின்சார உற்பத்தி முழுவதையும் தமிழ்நாட்டுக்கு வழங்கல், மற்ற அனல் மின் நிலையங்களுக்கு (தமிழ்நாட்டின் பொறியியல் பொருட்களுக்கு ஈடாக அந்நிய செலாவணியின்றி) ஆஸ்தி ரேலியா தர முன்வந்துள்ள நிலக்கரியைப் பயன்படுத்தி நிலக்கரி பற்றாக்குறை நோயை ஒழித்தல், தஞ்சை, தென் ஆற்காடு

மாவட்டத்தில் கிடைக்கும் இயற்கை வாயுவைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்தல் போன்றவற்றால் தமிழ்நாட்டின் மின் தேவைகளை நிறைவு செய்ய முடியும்.

**கூடன்குளம் அணுமின் நிலையம்:–**

திருநெல்வேலி மாவட்டத்தில் கூடன்குளம் பகுதியில் இரண்டு 1000 மெகாவாட் அணுமின் நிலையம் கட்ட மத்திய அரசு முடிவு செய்துவிட்டது. பல்லாயிரம் கோடி மதிப்புள்ள இத் திட்டம் சோவியத் அரசு கூட்டுடன் தொடங்கப்படுகிறது. சோவியத் அரசு தனது நாட்டில் மக்கள் எதிர்ப்பின் காரணமாக இதுவரை ஏழு அணுமின் நிலையங்களை மூடிவிட்டது. அதே நேரத்தில் தன் வசமுள்ள இது தொடர்பான தொழிற் நுட்பத் தையும், கருவிகளையும் இந்தியாவின் தலையில் கட்ட முடிவு செய்துள்ளது. இதையே "செர்னோபிள் அணுமின் நிலையத்தில் ஏற்பட்ட பேரழிவிற்குப் பிறகு அதன் உபயோகமற்ற பாகங்களை இந்தியாவின் தலையில் கட்ட சோவியத் நாடு விரும்பியது. அதுதான் கூடன்குளம்'' என்று பிரபல வழக்கறிஞர் ராம் ஜெத் மலானி கூறியுள்ளார்.

ASIDE (அசைடு) 16-11-88 இதழ் மூலம் கூடன்குளம் தொடர்பாக பின்வரும் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கூடன்குளம் நிலப்பகுதி அணுமின் நிலையம் கட்ட பொருத்தமானதா என்ற ஆய்வினை முறையாகச் செய்யாமல் அங்கு அணுமின் நிலையம் கட்ட முடிவு செய்துள்ளது. கூடன் குளம் அருகாமையில் உள்ள கிராம மக்கள் வெளியேற்றப்படப் போகிறார்கள். 75 கி.மீ. நீளத்திற்கு கூடன்குளம் அருகாமை கடல் பகுதியில் மீன் பிடிக்க தடை வரப் போகிறது. இது தவிர விவசாயத்திற்கு போதுமான நீர் வழங்க தடுமாறும் பேச்சிப் பாறை அணையில் இருந்து கணிசமான நீர் கூடன்குளம் அணுமின் நிலையத்திற்கு திருப்பிவிடப்படும். இவையனைத் திற்கும் மேலாக கூடன்குளம் அணுமின் நிலையம் செயல் பட்டபின் ஏற்படும் உலை எரிபொருள் மீண்டும் சோவியத் நாட்டிற்கு கொண்டு செல்லப்படும். அவை அணுகுண்டு தயாரிக்கப் பயன்படும்.



இவ்வாறு கதிரியக்கப் பொருளை கொண்டு செல்லும் போது வழியில் விபத்து ஏற்பட்டதுண்டு. உதாரணமாக இப்படி கதிரியக்கப் பொருளை கொண்டு சென்ற கலன் விரிசலுக் குள்ளாகி கதிரியக்கப் பொருள் கசிந்தது. இதனால் ஒரு தொழிலாளி இறந்தார். 8 பேர் படுகாயமுற்றனர். 06. 01. 88 'இந்து' இதழில் இச்செய்தி வந்துள்ளது.

கூடன்குளத்தில் கட்ட இருக்கும் அணுமின் நிலைய தொழிற்நுட்பம் பொருளாதார நோக்கில் லாபமற்றவை, பாது காப்பு தன்மை அற்றவை, இத்தொழில் நுட்பத்தில் செயல்பட்டு வரும் அணுமின் நிலையங்களில் பாதுகாப்பு மிகவும் மோசம். இவ்வகை அணுமின் நிலையங்களில் ஏற்பட்ட விபத்துகளை அரசுகள் மக்களுக்கு தெரியாமல் மறைத்திருக்கின்றன.

**நமது கோரிக்கைகள்:–**

1. செர்னோபிள் விபத்திற்குப் பிறகு பல நாடுகள் முடிவு செய்துள்ளது போல் நமது புதிய அணுமின் திட்டங்களை தற்காலிகமாக கிடப்பில் போட்டு நமது அணுசக்திக் கொள்கையை திறந்த பொதுமக்கள் விவாதத்திற்கு அனுமதித்து புதிய அணுசக்திக் கொள்கையை உருவாக்க வேண்டும். புதிய அணுசக்தி கொள்கை உருவாகும் வரை தமிழ்நாட்டில் கல்பாக்கம் அணுமின் நிலையம் செயல்படுவதை நிறுத்தி வைக்க வேண்டும். கூடன்குளம் அணுமின் திட்டத்தை கிடப்பில் போட வேண்டும்.

2. கல்பாக்கம் அணுசக்தி நிலையத்தில் பெரும் விபத்து ஏற்பட்டால் (செர்னோபிள் விபத்தில் 100 கி.மீ. வரை இருந்த மக்கள் அப்புறப்படுத்தப்பட்டனர்) சென்னை, செங்கற்பட்டு உள்ளிட்ட அருகாமை நகர கிராமப்பகுதி மக்களை வெளியேற் றவும், பாதுகாக்கவும் உடனே அரசு செயல்திட்டம் தயாரித்து மக்களைப் பயிற்றுவிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

3. தென் தமிழ்நாட்டின் தொழில் வியாபார வளர்ச்சிக்கு உண்மையிலேயே மத்திய அரசுக்கு அக்கறை இருக்குமானால், பல ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டுள்ள சேதுசமுத்திர திட்டத்தை உடனே செயல்படுத்த வேண்டும்.

5. விரயமாகி வரும் பம்பாய் எரிவாயுவை குழாய் மூலம் தமிழ்நாட்டிற்கு கொண்டுவரும் திட்டத்தை உடனே நிறைவேற்ற வேண்டும்.

**அணுசக்தி துறை தலைமை பீடம் பார்ப்பன ஆதிக்கத்தில் இருப்பதைப் பார்த்தோம். அணுசக்தி திட்டங்களால் வியாபார லாபம் பெற்று வருபவர்கள் 'இந்திய தேசிய முதலாளி- பன்னாட்டுக் கூட்டுச் சக்திகள் ஆவர், அணுமின் நிலைய எதிர்ப்பு என்பதனை டெல்லி ஆளும் பார்ப்பன - 'இந்திய' தேசிய முதலாளி - பன்னாட்டுக் கூட்டு கொள்கைக்கு எதிரான ஒன்றாக உருவாக்கி மக்கள் சக்தியை ஒன்று திரட்டுவோம்.**

## அணுகுண்டு தயாரிப்பதே, நோக்கம்!

*கூடங்குளம் அணுமின்திட்டம் தொடங்கிய வரலாற்றையும், அதற்கு எதிராக அப்போதே நடந்த போராட்டங்களை திசை திருப்ப நடந்த முயற்சிகளையும், மின்சாரம் தயாரிப்பதைவிட அணுகுண்டுக்கான மூலப் பொருளைத் தயாரிப்பதே இதன் நோக்கம் என்றும் விரிவாக விளக்குகிறது, இக்கட்டுரை. 'தீரா நதி' நவம்பர் மாத இதழில் வெளிவந்த கட்டுரையின் சுருக்கம்:*

1977 இல் மொரார்ஜி தேசாய் இந்தியப் பிரத மராய் இருந்தபோதே புதிய அணுமின் நிலையம் அமைப்பது பற்றி பேசப்பட்டது. பின்பு பல வருடங்கள் சென்று 26.11.1988 இல் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், அன்றைய சோவியத் ரஷ்யாவின் ஜனாதிபதி கோர்பசேவும் சேர்ந்து கூடங்குளம் அணுஉலை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

கூடங்குளம் அணுஉலை ஒப்பந்தம் கையெழுத்தான காலத்திலிருந்தே இதனை எதிர்க்கும் போராட்டங்கள் தொடங்கின.

1990களில் சோவியத் ரஷ்யா உடைந்தது அல்லது உடைக்கப் பட்டது. அதோடு பல வருடங்களாக சர்ச்சைக்குள்ளான கூடங்குளம் அணுஉலை பற்றிய பேச்சு முடங்கி முடமானது. எனவே இதை எதிர்த்துப் போராடியவர்கள் அணு வுலை கைவிடப்பட்டது என எண்ணி ஓய்ந்தனர்.



ஆனால், 25.03.1997 இல் அன்றைய ரஷ்ய அதிபர் போரிஸ் எல்ட்சினும், இந்தியப் பிரதமர் தேவ கவுடாவும், 1988 ஒப்பந்தத்தை தூசி தட்டி எடுத்துப் புதுப்பித்தனர். 7.10.2001 இல் கூடங்குளத்தில் அணு உலைக்கு அடிக்கல் நாட்டப் பட்டது. 6.1.2001 இல் அன்றைய இந்தியப் பிரதமர் வாஜ்பாய் ரஷ்யா சென்றார். அப்போது மாஸ் கோவில் இந்திய அணுசக்தி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர், வி.கே.சதுர்வேதியும், ரஷ்ய ஆட்டம்ஸ்ராய் எக்ஸ்போர்ட் பொது இயக்குநர் விக்டர் கோஸ்லாவ்வும் புது ஒப்பந்தத்தில் 2 அணு உலைகளின் கட்டுமானப் பணிகள் தொடங்கி முடுக்கி விடப்பட்டன.

அப்போது மீண்டுமாய் ஆங்காங்கு எதிர்ப்புக் குரல்களும், போராட்டங்களும் எழுந்தன. அணுஉலை கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டபோது, கூடங்குளத்தில் வாழும் பெரு வாரியான நாடார் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒப்பந்த வேலைகளும் வேலை வாய்ப்புகளும் கிட்டின. எனவே கடலோரங்களிலுள்ள மீனவர்கள் பொறாமையால் அணு உலையை எதிர்க்கின்றனர் என்ற கருத்து சாமானிய மக்கள் மேல் திணிக்கப்பட்டது. இவ்வாறு சாதி ரீதியாக மக்கள் திட்டமிட்டு பிரித்தாளப்பட்டனர்.

அடுத்து நாத்திக ரஷ்யாவிலிருந்து இந்த அணுவுலைகளுக்கு தொழில்நுட்பமும் வருகின்றன. எனவே ஆத்திக கிறித்துவர்கள் இந்த அணுஉலையை எதிர்க்கின்றனர் என்ற கருத்து உண்மைக்குப் புறம்பாக திட்டமிட்டுப் பரப்பப்பட்டது. இவ்வாறு சாமானிய மக்கள் சாதியாலும் சமயத்தாலும் ஆதிக்க சக்திகளாலும் அணு உலைப் பணிகளால் பயனடைந்தவர்களாலும் பிரித்தாளப் பட்டனர். எனவே, போராட்டங்கள் வலுவாக எழவில்லை.

தமிழகத்தில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. கட்சிகள் இந்த அணு உலையை எதிர்க்கவில்லை. எதிர்ப்பாளர்களுடைய எதிர்ப்பை பொருட்படுத்தவுமில்லை. இந்த இரு கட்சிகளுக்கும் அணு உலை இங்கு கால்பதிக்க காரணமானவர் களுக்கும் இடையில் திரை மறைவில் என்ன நடந்தது என்பது இன்னும் இருளிலே கிடக்கிறது. இல்லை யெனில் கோவா, குஜராத் மற்றும் மகாராஷ்டிராவில் மக்கள் எதிர்ப்பால் கால்பதிக்க இயலாத இந்த அணுவுலை தமிழகத்தில் எப்படி கால்பதிக்க முடிந்தது? இடதுசாரி கட்சிகள் அமெரிக்காவுடன் இந்தியா செய்து கொண்ட அணு ஆயுத ஒப்பந்தத்தைதான் எதிர்க்கிறார்கள். அணுமின் உலைகளை எதிர்க்கவில்லை. ஆனால் மார்க்சிய, லெனினியக் குழுவினர் அணுமின் உலைக்கும் எதிர்ப்புத் தெரிவித்தனர். தொடர்ந்து தெரிவிக்கின்றனர்.

1990-களில் ஒரு பக்கம் சோவியத் ஐக்கிய நாடுகள் உடைந்ததன் மறுபக்கம் உலகமயமாக்கல் என்ற போக்கு வலுவாகக் காலூன்றியது. இவ்விரு நிகழ்வு களும் மக்களுடைய கருத்தையும் கவனத்தையும் அதிகம் ஈர்த்தன. இவை பற்றியே அதிகம் பேசப்பட்டன. இப்பின்புலத்தில், அணுமின் உலை எதிர்ப்பு பின்னுக்கு தள்ளப்பட்டன.

ஆகஸ்ட், 1988 களிலிருந்தே கூடங்குளம் அணுமின் உலைக்கு மக்களிடமிருந்து எதிர்ப்புப் போராட்டங்கள் நடந்தே வந்திருக்கின்றன. பல பிரித்தாளும் சூழ்ச்சிகளாலும்கூட இப்போராட் டங்களை முற்றிலும் முறியடிக்க முடியவில்லை. எனவே, இப்போதுதான் காலம் கடந்து போராட்டம் நடக்கிறது என்பது உண்மை வரலாற்றுக்குப் புறம்பானது.

இந்த அணுமின் நிலையத்திற்காக இதுவரை செலவான 21 ஆயிரம் கோடி ரூபாய் பெரிதா? இந்த நிலையத்தைச் சுற்றி 30 கிலோ மீட்டர் சுற்றளவில் வாழும் 30 லட்சம் சாமானிய மக்களின் வாழ்வு முக்கியமா? பணமா? மக்களா? என்ற விழுமிய மோதலில் மக்களைப் பலியாக்கலாமா? 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் மட்டுமே ஒரு இலட்சத்து எண்பதாயிரம் கோடியை விழுங்கியதே!

மின்சார பற்றாக்குறை என்பது உண்மைதான். இதை யாரும் மறுப்பதற்கில்லை. தற்போது இந்தியாவில் செயல்படும் 20 அணுமின் உலைகளிலிருந்து நாம் பெறும் மின்சாரம் 2.68 விழுக்காடே மற்ற 97 விழுக்காடு மாற்று வழிகளிலிருந்து பெறுகிறோம். அபாயங்கள் நிறைந்த அணுமின் உலைகளுக்குப் பதிலாக மாற்று வழிகளை காற்று, தண்ணீர், சூரிய ஒளி, குப்பைகள போன்றவற்றி லிருந்து பெற நாம் முயற்சிக்கலாம்.

அரசு விழாக்கள் மற்றும் சமய விழாக்களுக்கு மிகப் பெரிய அளவில் செலவிடப் படும் மின்சாரத்தைக் குறைத்து சிக்கன மாக்கலாம். சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் பெற மக்களுக்கு மானியம் வழங்கலாம். மின் திருட்டை கெடுபிடியாகக் கட்டுப் படுத்தலாம். இவை போன்ற மாற்று வழிகளையும், மின்சாரத்தைச் சிக்கனமாய்ப் பயன்படுத்துவதையும் செயல்படுத்தலாம்.

ஆபத்து மிகவே குறைவான அணுஉலை அமைக்க யுரேனியம் அல்லது புளூட்டோனியத்திற்குப் பதிலாக தோரியத்தை உபயோகிக்கலாம் என்பது 2005 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப் பட்டது. இதைக் கண்டுபிடித்தவர்களில் ஒருவர் வி.ஜகந் நாதன். இவர் தமிழர் என்பது பெருமை நமக்கு உண்டு. பிரிட்டன், அமெரிக்கா, நார்வே போன்ற நாடுகள் தோரியம் பயன்படுத்தும் முடிவுக்கு வந்துள்ளன. ஏன் இந்தியா இதைப் பயன்படுத்தக் கூடாது?



3 விழுக்காடு மிகக் குறைந்த மின்சாரம் தயாரிக்க அதிக ஆபத்துடைய யுரேனியம், புளூட்டோனியம் தான் பயன்படுத்து வோம் என்று இந்தியா அடம்பிடித்தால், அதற்கு ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்று சந்தேகப்பட இடம் உண்டு. தோரியக் கழிவிலிருந்து அணுகுண்டு, அணு ஆயுதம் தயாரிக்க முடியாது. ஆனால் புளூட்டோனிய, யுரேனியக் கழிவுகளிலிருந்து இவைகளைத் தயாரிக்க முடியும். ஆக, கூடங்குளம் அணுஉலை யிலிருந்து மின்சாரம் பெறுவது இந்தியாவின் முதல் நோககமல்ல. அணுகுண்டும், அணு ஆயுதமும் செய்வதுதான் உள்நோக்கம். முதல் நோக்கம் என்பது வெளிச்சத்திற்கு வருகிறது. மின்சாரத் தால் ஆசிய அரங்கில் இந்திய வல்லரசு நாடாக ஆக முடியாது. அணு ஆயுதங்களாலும் அணு குண்டாலுமே அது சாத்தியமாகும்.

வறுமை நிறைந்த இந்தியா, சீனாவைப் பின்தள்ளி வட்டார வல்லரசாக, கூடங்குளம் அணுஉலையைப் பயன்படுத்த நினைக்கிறது என்பதே உண்மை. மாலத் தீவுகளிலும், இலங்கையிலும் நங்கூரமிட்டுக் கொண்டிருக்கிற சீனர்களை, தமிழகத்தின் தென்கோடி முனையிலிருந்து உளவு பார்க்க ஏற்கனவே இப்பகுதியில் இந்தியா கடற்படைத் தளத்தை நிறுவி வருவதும் குறிப்பிடத்தக்கது.

கூடங்குளம் அணுமின் நிலையம் செயல்பாட்டுக்கு வந்தால்தான் தமிழ்நாட்டு தொழில் வளர்ச்சிக்கு 925 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என்று இந்தியப் பிரதமர் சொல்லி யிருக்கிறார். தமிழர்கள் வாழ்வு வளர்ச்சியில் பிரதமர் காட்டும் அன்பு அக்கறைக்கு மிகவே நன்றி. ஆனால் ராமேஸ்வரம் மீனவர்கள் ஏறக்குறைய 600 பேர் சிங்கள ராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பலர் காயம்பட்டு தொழிலுக்குப் போகாமல் முடங்கிக் கிடக்கிறார்கள். எத்தனையோ முறை மைய அரசிடம் இது குறித்து முறையிட்டும் பிரதமர் மன்மோகன்சிங் காதுகள் செவிடாய், இதயம் மலடாய், கைகள் முடமாய்க் கிடப்பதேன்?

இறுதியாக அணுஉலை அபாயத்தை உணர்ந்த ஜெர்மனி, இத்தாலி, ரஷ்யா, ஸ்விட்சர்லாந்து, மெக்சிக்கோ, ஜப்பான், ஆஸ்திரியா, அமெரிக்கா, நார்வே போன்ற நாடுகள் அணு உலைகளை மூட முடிவெடுக்கும்போது இந்தியா அணு உலை களைத் திறக்க துடிப்பதேன்?

உலகளவில் அறியப்பட்ட விஞ்ஞானி ஆல்பெர்ட் அயின்ஸ்டைன் "அணுமின் சக்தி பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் சக மனிதர்களுக்கு விளக்கும் விஞ்ஞானிகளாகிய

எங்களுக்குத் தப்பிக்க முடியாத ஒரு சமூகப் பொறுப்பு உள்ளது. இதில்தான் நம்முடைய பாதுகாப்பும் நம்பிக்கையும் இருக்கிறது. அதாவது அறிவுடைய குடிமக்கள் வாழ்வுக்காக செயல்படுவோர்களேயொழிய சாவுக்காக அல்ல" என்று 64 ஆண்டுகளுக்கு முன்பு 1947லேயே கூறிச் சென்றார்.

சுவிட்சர்லாந்து எரிசக்தி அமைச்சர் டேரிலியூதார்டு என்பவர் பாராளுமன்றத்தில் "எமது குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி அணுஉலைகளை முற்றாக மூடுகின்ற முடிவுக்கு ஆதரவு வழங்க வேண்டும். அணுசக்தியின் பயன்பாட்டுத் தேவை உள்ளது என்பது மறுக்க முடியாதுள்ளபோதும், புதிய தொழில்நுட்ப வளர்ச்சி மூலமாக அணுசக்திக்கு மாற்றீடாக புதிய சக்தியினை கண்டுபிடிக்க இயலும்" என்று குறிப்பிடுகிறார். ஆம், நமது இன்றைய சுயநலத் தேவைகளில் மூழ்கி நமது வருங்காலத் தலைமுறைகள் மீது தாங்க முடியாத கதிர்வீச்சு நச்சை 25000 ஆண்டுகள் தூக்கிச் சுமக்க வைக்க நமக்கு எந்தத் தார்மீக உரிமையும்இல்லை. 30 ஆண்டுகள் பயன்பாட்டுக்குப் பிறகு அணுக்கழிவுகளை 25000 ஆண்டுகள் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும். இப்படிப் பாதிப்பில்லாமல் அணுக் கழிவுகளைப் பாதுகாக்க விஞ்ஞானிகள் இதுவரை சீரிய வழி எதையும் இன்று வரை கண்டுபிடிக்கவில்லை.

**நன்றி: புரட்சிப்பெரியார்முழக்கம், 01.12.2011**